O.S.172/2019
PW2 – ஜான்சாமுவேல்
நாள் 18.02.2026, 04.00 P.M.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அதை கையில் எடுத்துவரவில்லை. வாதி செல்வராஜ் எனக்கு அக்கா மகன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. கிழவன் என்பவருக்கு இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் தூங்கன் மற்றும் விரதை ஆகும். வழக்கின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா இடம் எனக்கு தெரியும். SLR காலத்தில் தாவா சொத்தை தவிர்த்து இதர சொத்துக்கள் எனது தகப்பனார் மற்றும் தூங்கன் பெயரில் இருந்தது என்றால் சரிதான்.

2. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து தூங்கன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் அதை தொடர்ந்து அவரது மனைவி பாக்கியத்தம்மாளுக்கு பாத்தியம் என்றும் அவரது காலத்திற்கு பிறகு 1ம் பிரதிவாதி கிரேஸ் என்பவருக்கு பாத்தியமானது என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்தை 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கி இன்று வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்குரியது என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி